நிதி அலுவலகம்,
அண்ணாமலை பல்கலைக்கழகம்,
அண்ணாமலை நகர்.

ந.க.எண்.2/நிதி அலுவலர்/2021 நாள்: 28.09.2021

CTS

# சுற்றறிக்கை

பொருள்: அண்ணாமலை பல்கலைக்கழகம் - செலவின தொகை அனுமதித்தல் - செயல்முறை ஆணை வெளியிடுதல் - தொடர்பாக.

பார்வை: தமிழ்நாடு நிதி விதி தொகுப்பு I மற்றும் II

*****

பல்கலைக்கழகத்தில் ஊழியர்களுக்கு வருங்கால வைப்பு நிதி தற்காலிக முன்பணம் / பகுதி இறுதி தொகை, சிறப்பு சேம நலநிதி, குடும்ப நலநிதி, தேர்வு நிலை போன்ற இதர அனைத்து தொகை அனுமதிக்கும் நேர்வுகளிலும் செயல்முறை ஆணைகள் உரிய அலுவலர்களால் வழங்கப்படவேண்டும்.

மேலும் தொகை அனுமதிக்கப்படும் அனைத்து நேர்வுகளுக்கும், உபகரணங்கள், தளவாட பொருட்கள் வாங்குவது, ஒப்பந்ததாரர்களுக்கு உணவு கட்டணம் வழங்குவது, கட்டுமானப்பணி மற்றும் இதர பணி செய்தமைக்கு தொகை வழங்க செயல்முறை ஆணைகள் உரிய அலுவலர்களால் வெளியிடப்பட்ட பிறகே அதன் அடிப்படையில் தொகை அனுமதித்து வங்கிக்கான காசோலை/கொடு ஆணை வழங்கப்பட வேண்டும் என்பது அரசின் நடைமுறை விதியாகும். அவ்விதியின்படி இனி மேற்கண்ட அனைத்து தொகை அனுமதிக்கும் நேர்வுகளுக்கும் செய்முறை ஆணை வெளியிடப்பட்ட பிறகே காசோலை எழுதப்படவேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறது.

சம்பளப்பட்டியல் மற்றும் பயணப்பட்டியல்கள் போன்றவைகள் இதில் அடங்காது. இந்த நடைமுறை 01.10.2021 முதல் கண்டிப்பாக நடைமுறைப்படுத்தபடுகிறது.

பதிவாளர்(பொ)
அண்ணாமலை பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்

பெறுதல்:-

- அனைத்து புல முதல்வர்கள்
- அனைத்து துறைத்தலைவர்கள்
- தேர்வு கட்டுப்பாட்டு அதிகாரி
- இயக்குனர், தொலைத்தூரக்கல்வி இயக்ககம்
- இயக்குநர், (Academic Affairs / DRD / DARE / EDA / Training, Placement & Entrepreneurship / IQAC / Centre for Intellectual Property Rights)
- மருத்துவ கண்காணிப்பாளர், இராஜா முத்தையா மருத்துவமனை
- ஒருங்கிணைப்பாளர், விடுதிப்பாதுகாவளர்கள் குழுமம்
- அனைத்து விடுதி பாதுகாவலர்கள்
- இயக்குநர், அண்ணாமலை புத்தமைப்பு (Innovation) மையம்
- பொது தொடர்பு அதிகாரி, அண்ணாமலை பல்கலைக்கழகம்
- அனைத்து அதிகாரிகள்
- அனைத்து பிரிவு அலுவலர்கள்

இச்சுற்றறிக்கையினை சுற்றுக்கு விட கேட்டுக் கொள்ளப்படுக்கிறது.

நகல்:-

- துணைவேந்தரின் நேர்முக உதவியாளர்